Registered No M 5068.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி ஆடிமீ 11உ 26—7—1948 ஹிஜிரி 1367 ரம்ஜான்மீ 18உ திங்கட்கிழமை. } இதழ் 27

# ஒற்றுமை வேண்டும்.

"இன்றைய நிலைமையில் ஒற்றுமையே தேவை. நம் இதர தேவைகள் அனைத்துமே அதில் அடங்கியிருக்கின்றன. சமுதாய முன்னேற்றத்தின் எல்லா வேலைகளையும்விட பரஸ்பர ஒற்றுமை உடனடியான முக்கியத்துவம் கொண்டிருக்கிறது. ஆகையால் இந்தியர்கள் அனைவரும் தனிப்பட்ட முயற்சிகள், போட்டி நடவடிக்கைகளை விட்டு உடனடியான லட்சியங்கள் சித்திக்கும் வரை ஒன்றுபட்டு ஒருமுகமாக முயற்சிக்கவேண்டும்" என்று டில்லி நகர சபை அளித்த வரவேற்பு பத்திரத்துக்கு பதிலளிக்கையில் கவர்னர் ஜெனரல் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் கூறினர்.

பரஸ்பர ஒற்றுமையின் அவசியத்தை ஒருவரும் மறுக்கமுடியாது. ராஜாஜியின் வேண்டுகோளை இந்தியர் அனைவரும் வரவேற்பரென்பது நிச்சயம். ஆயினும் எம்மாதிரி ஒற்றுமை வேண்டும்? 'தனிப்பட்ட முயற்சிகள்,' 'போட்டி நடவடிக்கைகள்' என்றால் என்ன? சித்திக்கவேண்டிய உடனடியான லட்சியங்கள் யாவை? என்பதை ராஜாஜி இன்னும் சற்று தெளிவாக விளக்கியிருந்தால் ஒவ்வொரு இந்தியனும் சுலபமாக புரிந்துகொள்ள முடிந்திருக்கும்.

இன்றைய சூழ்நிலையில் 'ஒற்றுமை' என்ற மாத்திரத்தில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையே நினைவுக்கு வருகின்றது. மகாத்மாஜியின் லட்சியத்தை நினைவூட்டியதிலிருந்து ராஜாஜி ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமையைக் குறித்தே பேசினர் என்று தெரிகிறது.

இன்று வகுப்பு ஒற்றுமையைவிட அதிகமாக இல்லாவிடினும் அதே அளவுமுக்கியத்துவம் வாய்ந்தஇதர பிரச்னைகளும் நம்மை எதிர்நோக்குகின்றன. அவற்றில் சர்க்காருக்கும்சர்க்கார்சிப்பந்திகளுக்குமிடையே ஒற்றுமை; தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலை முதலாளிகளுக்கு மிடையே ஒற்றுமை; விவசாயிகளுக்கும் நிலச்சுவான்தார்களுக்கு மிடையே ஒற்றுமை; பல்வேறு கொள்கைகளைக்கொண்ட அரசியல் கட்சிகள் மக்களிடையே ஒற்றுமை முக்கியமானவைகளாகும்

இன்று இந்தியா அரசியல் பொருளாதார நெருக்கடி கட்டத்தை கடந்து கொண்டிருக்கிறது. நாட்டின் சுபிட்சத்துக்கும் முன்னேற்றத்துக்கும் வகுப்பு ஒற்றுமையைவிட ஒன்றுக்கொன்று முரண் பட்ட போராடும் வர்க்கங்களிடையே ஒற்றுமை ஏற்படுவது மிகவும் அவசியம்.

ராஜாஜி விரும்புவது வகுப்பு ஒற்றுமையாயின் இந்தியாவிலுள்ள ஒவ்வொருவர்க்கமும் அதை வரவேற்கும். வகுப்பு ஒற்றுமைக்கும் சகோதரத்துவத்துக்கும் இன்று இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் அவசியத்தைப்போல் இதற்குமுன் என்றுமே இருந்ததில்லையென்று ஒவ்வொரு இந்தியனும் ஒப்புக் கொள்வான். ஆனால் தலைவர்கள் வகுப்பு ஒற்றுமையைக் குறித்து பேசுவதைக் கேட்கும் போதெல்லாம் இந்தவேலையை யார் செய்வது? எப்படிச்செய்வது? என்ற கேள்வியே முதலில் எழுகின்றது.

அநேக வருஷங்களாக வகுப்பு ஒற்றுமைக்கு வேண்டுகோள் விடுக்கும் வேலை நடந்து கொண்டுதானிருக்கிறது. மகாத்மா காந்தியின் ஆத்மீகத் தியாகத்தைவிட உருக்கமான வேண்டுகோள் வேறென்ன இருக்கமுடியும்? அதற்குப்பிறகும் வகுப்புவாதிகளின்

மனம் மாறவில்லை. உலகத்தின் மிகப்பெரிய மனிதரின் கொலையும் அவர்களுடைய கல்நெஞ்சத்தைக் கரைக்கவில்லை. ஒருகால் நாட்டிலுள்ள பல்வேறு வகுப்புக்கள் ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழாமல் ராஜாஜியின் ஆசை பூர்த்தியாகாமலேயே இருந்துவிடுமோவென்றுகூட அஞ்சவேண்டியிருக்கிறது.

அவநம்பிக்கை அளிக்கத்தக்க இக்கட்டத்தை அடைந்தபிறகு நமக்கு முன் இரண்டு வழிகள் மாத்திரமே இருந்து விடுகின்றன. வகுப்பு ஒற்றுமைக்கான முயற்சிகளை அறவே விட்டு விடுவது ஒன்று. இந்தியா பாகிஸ்தான் டொமினியன்களிடையே பூரண ஜனப்பரிவர்த்தனை செய்துகொள்வது மற்றொன்று. ஆனால் இவ்விரண்டு வழிகளையும் நடைமுறையில் மேற்கொள்வது சாத்தியமில்லை யென்பது நிச்சயம்.

முதல் பிரச்னையான வகுப்புத் துவேஷத்தை அதன் போக்கிலே விடுவதன் மூலம் நாட்டின் முன்னேற்றம் தடைபடுவதையோ சகித்துக்கொண்டிருக்க முடியாது. இரண்டாவதாக பரிவர்த்தனை. ஒரு கோடி மக்களின் பரிவர்த்தனையால் இரண்டு டொமினியன்களும் இதுவரை தலைதூக்கமுடியாமல் இருக்கின்றன மேலும் ஐந்துகோடி மக்களின் பரிவர்த்தனையால் ஏற்படக்கூடிய நிலைமையை எண்ணிப்பார்ப்பதற்குமில்லை. எனவே சுற்றிவளைத்து கொண்டு நாடு முன்னேற வகுப்பு ஒற்றுமை அவசியம் என்ற கட்டத்துக்கே மீண்டும் வரவேண்டியிருக்கிறது. இந்நிலையில் வகுப்பு ஒற்றுமையை யார் ஏற்படுத்துவது? எப்படி ஏற்படுத்துவது? என்ற கேள்வி திரும்பவும் எழாமல் இருப்பதில்லை.

மேலே குறிப்பிட்டிருப்பதைப்போல் இதுவரை வெறும் வேண்டுகோள்களால் எவ்வித பிரயோஜனமும் ஏற்பட்டதில்லை ஏற்படப் போவதுமில்லை. பாமரர்களுக்கு மத, கலாசாரக் கடமைகளை நினைவூட்டி நாட்டை எதிர்நோக்கியுள்ள நெருக்கடியை சமாளிப்பதும் அசாத்தியம். எனவே எதுவரை சர்க்கார் கடுமையான நடவடிக்கையில் இறங்காதோ அதுவரை வெற்றியை எதிர்பார்ப்பதற்கில்லை. இங்கும் அங்குமாக ஒரு சில வகுப்புவாதிகளை கைது செய்வது மட்டும் போதாது. தீர்க்கமான நடவடிக்கை எடுத்து வகுப்புவாத உணர்ச்சியை வேருடன் களைந்து எறிய வேண்டும். இந்தியாவிலிருந்து வகுப்புவாத சாபக்கேட்டை ஒழிக்கவேண்டுமென்பது ராஜாஜியின் உண்மையான விருப்பமானல் வகுப்புத் துவேஷத்தை தூண்டும் தனிநபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதுடன் அவருடைய சர்க்கார் எந்தஒரு வகுப்பு அல்லது சமூகத்தின் தனிப்பட்ட உரிமைகளுக்கும் இடமளிக்கலாகாது. சட்டசபைகள், உத்தியோகங்களில் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமும் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களும் ஒழிய வேண்டும். தனித்தனி வகுப்புகள், சமூகங்கள் என்ற அடிப்படையில் பிரச்னைகளை அணுகுவதை மட்டும் விட்டுவிட்டால் வகுப்பு வாதம் தானகவே மறைந்துவிட முடியும்.

வகுப்பு ஒற்றுமையை வற்புறுத்திக்கொண்டிருப்பதே பிரச்னையை நீடிக்கச்செய்ய உதவுகின்றது என்பதே நம்முடிவு. ஆகையால் தலைவர்கள் வகுப்பு ஒற்றுமை வேண்டுகோளைக் கைவிட்டு நிர்மாண வேலைகளில் ஈடுபடுவதே வகுப்புப்பிரச்னைதீர சிறந்தபரிகாரமென்பது நம் அபிப்பிராயம்.

வகுப்பு ஒற்றுமைக்குப்பிறகு வர்க்க ஒற்றுமை இருக்கிறது. நாட்டின் நிர்மாணத்துக்கு வகுப்பு ஒற்றுமையைவிட வர்க்க ஒற்றுமையே முக்கியம். வகுப்பு ஒற்றுமை வேலையைவிட வர்க்க ஒற்றுமை வேலை மிகவும் சிரமமானது இந்திய சமுதாயம் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்ட பல வர்க்கங்களாகப் பிரிந்திருக்கிறது. இன்றைய சமூகப் பொருளாதார அமைப்பில் அடிப்படை மாறுதல் செய்யப்படாதவரை இந்தவர்க்கங்கள் ஒன்றுபட முடியாது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டிருக்கும் பல்வேறு அரசியல் கட்சிகளின் அடிப்படையில் ஒற்றுமை ஏற்படுத்தப் படாதவரை அவைகள் ஒன்றுபட்டு ஒருமுகமாக முயற்சிக்க முடியாது. எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் அவ்வித ஒற்றுமை சாத்தியமில்லை பாஸீஸ அல்லது யதேச்சாதிகார பொதுவுடமை ஆட்சியில் மாத்திரமே அது சாத்தியம்.

அம்மாதிரி ஒற்றுமை ராஜாஜியின் குறிக்கோளாக இருக்கமுடியாதென்றும் முரண்பட்ட பொருளாதாரக் கொள்கையைக் கொண்ட கட்சியோ அல்லது காங்கிரஸைத்தவிர வேறு அரசியல் ஸ்தாபனமோ இருப்பது சமுதாய முன்னேற்றத்துக்கு தீங்கென்று நினைக்கும் சில தீவிர காங்கிரஸ் வாதிகளின் முடிவை ராஜாஜி ஒப்புக்கொள்ள மாட்டாரென்றும் நம்பலாம்.

தேசம் முன்னேற மக்களனைவரும் ஒன்றுபட்டு ஒருமுகமாக முயற்சித்து தனிபபட்ட முயற்சிகள் போட்டிகளை விடவேண்டுமென்பதை வரவேற்கத்தான் வேண்டும். சமுதாய நலனை உத்தேசித்து தனிநபர் முயற்சிகள், போட்டிகளுக்கு இடங்கொடாமல் ஒன்றுபட்டு முயற்சியை உருவாக்கி நாட்டின் நிர்மாணத்துக்கு ஜீவாதாரமான விவசாயம் தொழிலியல் துறைகளில் இந்திய சர்க்கார் தனிநபர் நலன்களை ஒழித்துக்கட்ட வேண்டியதவசியம்.

# அன்று திறமை தகுதி இருந்தது இன்று அதுவுமில்லை.

—( ஜெயப்பிரகாஷ் நாராயண் )—

"ஆகஸ்ட் 15-க்குப் பிறகு பாஸிஸ முறைகளை அனுஷ்டிக்கும் காங்கிரஸ் சர்க்கார் தன்னுடைய போக்கால் அழிவுத் துறையில் இழுத்துச் செல்லுகின்றது. காங்கிரஸ்காரர்கள் நிர்வாகத்தை ஏற்றதும் குறுகிய காலத்தில் மக்கள் நிலைமையை உயர்த்துவார்கள் என்று நம்பி காங்கிரஸிலிருந்துகொண்டு அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய விவசாயிகள், தொழிலாளர்கள், நடுத்தர வர்க்கத்தினர் இன்று விழித்துக்கொண்டுவிட்டனர். நாடு விடுதலையடைந்த பிறகு பெருமைப்படத் தக்க முறையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக வளருகின்றனர். ஏழைகள் மேலும் ஏழைகளாகிக்கொண்டே போகின்றனர். நியாயமற்ற சமத்துவமற்ற மூலதன விநியோகமே அதற்குக் காரணம். ஜனநாயக நாடுகளில் அரசாங்கத்தை அமைக்கும் மெஜாரிடி கட்சிக்கு நிர்வாகத்துடன் எவ்வித சம்மந்தமும் இருப்பதில்லை. ஆனால் இங்கு அரசாங்கத்தை அமைத்த காங்கிரஸ் தன் முடிவுகளை சுமத்துகின்றது. சட்டத்துக்கு விரோதமான முடிவுகளை எதிர்க்க ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையுண்டு. அநேக இடங்களில் காங்கிரஸ் தன் அரசியல் எதிரிகளை ஒடுக்குவதற்காக அதிகாரத்தைப் பிரயோகித்திருக்கிறது." என்று சோஷலிஸ்ட் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் கல்கத்தா நகர சோஷலிஸ்ட் கட்சியின் வருஷாந்திரக் கூட்டத்தில் பேசினார்.

மேலும் அவர் "இந்திய தேசிய டிரேட் யூனியன் காங்கிரஸ் யோஜனை பேரில் சில இடங்களில் சோஷலிஸ்ட் கட்சி தலைவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இன்றைய நிர்வாக இயந்திரம் சீர்கேடடைந்திருக்கிறது. ஒவ்வொரு இலாகாவிலும் லஞ்சமும் உறவினர்களை ஆதரிப்பதும் பெருகி வருகிறது." என்று குற்றம் சாட்டினார்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு திறமையும் தகுதியும் இருந்தது. இன்றைய ஆட்சிக்கு அதுவுமில்லை. பழைய ஆட்சிக்கும் இன்றைய ஆட்சிக்கும் இதைத் தவிர வேறு வித்தியாசமில்லை.

லஞ்சம் சகஜமாய்விட்டது. சர்தார் பட்டேலைப் போன்ற உறுதியான மனிதராலும் தனக்கு கீழுள்ள நிர்வாக இலாகாவில் இருந்துவரும் குறைகளைப் போக்க ஏன் முடியவில்லையென்பதுதான் கேள்வி.


லஞ்ச வழக்கத்தைத் தடுக்க மூன்று வழிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒன்று சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை தங்களுடைய ரொக்க இருப்பு சொத்து பற்றிய விவரங்களை சமர்ப்பிக்க வேண்டுமென்பதை கட்டாயமாக்கவேண்டும்.

இரண்டு. ஊழல்களைக் கண்டு பிடிப்பதற்காக ரகசிய இலாகா உள்நாட்டிலாகாவின் கீழ் அமைக்கப்படவேண்டும்.

மூன்று. நான்கு அல்லது ஐந்து சுப்ரிம் கோர்ட் ஹைகோர்ட் ஜட்ஜுகள் அடங்கிய பிரத்யேக கோர்ட் ஒன்று லஞ்ச வழக்குகள் விசாரிப்பதற்காகவென்றே அமைக்கப்பட வேண்டும். அதன் முடிவுகளை ஆட்சேபித்து அப்பீல் செய்ய இடமிருக்கக் கூடாது

காங்கிரஸை சோஷலிஸ்டு ஸ்தாபனமாக மாற்றுவதற்கு செய்த முயற்சி வெற்றியடையாமல் போய்விட்டது. காங்கிரஸ் முதலாளிகள் ஸ்தாபனமாக மாறி வருகின்றது. ஆகையால் சோஷலிஸ்டுகள் எதிர்க்கட்சியின் அந்தஸ்தைப் பெறுவதற்காக காங்கிரஸைவிட்டு விலகினர். ஜனநாயக ஆட்சியில் எதிர்கட்சி அவசியம். சோஷலிஸ்டு ஊழியர்கள் மக்களின் சேவைக்கு தங்களை அர்ப்பணிக்க வேண்டும். அதிகாரத்துக்கு வரும் எண்ணம் சோஷலிஸ்டுகளுக்கு கூடாது.

**Namath Watch Company,**
37-38, RATTAN BAZAAR,
P. T. MADRAS.



"எலிடா"
ரூபா 95/-
ரோல்டு கோல்டு $7\frac{3}{4}$ சைஸ் ஆப்டிக் கிளாஸ் கர்வட் ஷேப்.
ரோமர், பியர்பு, ரிக்கார்டு,
இன்னும் அநேக ரகங்கள் சப்ளை செய்யப்படும்
நேர்த்தியான லேடி கடியாரங்களும் கிடைக்கும்.

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 26—7—'48 திங்கட்கிழமை { இதழ் 27

# சுதந்திரத்தின் பலன்.

நீண்ட கால ஆசைகள் மாபெரும் தியாகங்களுக்குப் பிறகு கிடைத்திருக்கும் சுதந்திரம்; அடிமைக்கு எதிர் திசையில் அமைந்திருக்கும் சுதந்திரம், இந்தியர்களின் பெரும்பாலோரை லக்ஷியம் கைகூடி விட்டதென்று எண்ணி திருப்தியடையும்படிச் செய்திருக்கிறது உண்மையில் நம் லட்சியம் சுதந்திரம் மட்டுமல்ல. வெறும் சுதந்திரத்தை லட்சியமென்று நினைப்பதும் தவறு. வெறும் சுதந்திரம்நல்லதுமல்ல. நாடுதற்கரிய பொருளுமல்ல. அதனால் வாழ்க்கையின் பெருஞ்செல்வமும் மானிட முயற்சியின் பலனும் கிட்டிவிட முடியாது. சுதந்திரம் உன்னத லட்சியத்தை அடைவதற்கான ஒரு வழி மக்கள் கூட்டு முறையில் நிம்மதி, சுபிட்சம், சந்தோஷம், கவலையின்மை, நியாயம், சமத்துவம் அடைவதற்கும், ஆத்மீக, தார்மீக உணர்ச்சிகளின் அளவை உணர்ந்து, சக்தி வாய்ந்த சிறந்த சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கும் ஒரு சாதனமேயாகும். அடிமையில் மனிதனுடைய இஷ்டத்துக்கு சுதந்திரமில்லை சுதந்திரத்தில் தன்னிஷ்டப்படி சுபிட்ச வாழ்க்கைக்கு அவசியமான உபகரணங்களை சேகரித்துக்கொள்ளும் வசதியை மனிதன் பெறுகிறான். அடிமை வாழ்வு வெறுக்கப்படுவதற்கும் சுதந்திரம் விரும்பப்படுவதற்கும் அதுதான் காரணம். எனவே சுபிட்சத்தைக் கொடுக்காத வெறும் சுதந்திரத்தை லட்சியம் என்று சொல்ல முடியுமா? மனிதர்களின் வாழ்க்கையை செப்பனிட்டு அதனிடையே ஒன்றுபட்ட அம்சத்தை உருவாக்கி, நியாயமான ஆசைகள் பூர்த்தியாவதற்கு சந்தர்ப்பம் அளிக்கும் சுபிட்சமும், சந்தோஷமும் பண்பாடும்தான் உண்மை லட்சியமாகும் அழிவு, தான்தோன்றித்தனம், பீதி, அவநம்பிக்கை, அக்கிரமம், அநியாயம், அராஜகத்துக்கு அடிகோலி, மனிதர்களை காட்டுமிராண்டிகளாக்கும் சுதந்திரம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். உண்மையான சுதந்திரமாக மட்டும் இருக்க முடியாது. மனிதன் அடைய விரும்பும் மானிட இயற்கையின் லட்சியங்களை அவ்வித சுதந்திரத்தை சாதனமாகக் கொண்டு அடைவது சாத்தியமில்லை. லட்சியத்துக்கும் லட்சியத்தை அடையும் மார்க்கத்திற்கு மிடையே இருக்கும் வித்தியாசத்தை சரிவர உணர்ந்து கொள்ளாததின் பலனாக நாம் வெறும் சுதந்திரத்தையே லட்சியமென்று நினைத்திருக்கிறோம். அராஜகத்தில் ஆழ்த்தி சுபிட்சத்தையும், அமைதியையும் பறித்துக் கொள்ளும் சுதந்திரத்தை தொல்லை, சாபக்கேடென்று தான் சொல்லவேண்டும். துரதிஷ்ட மனிதனின் பரிதாபகரமான வீழ்ச்சியும் அதுவே. சுதந்திரம் என்பதற்கு அடிமை அகல்வது என்பது மட்டும் அர்த்தமல்ல. சுதந்திரம் எனப்படுவது மறுக்கமுடியாததொரு உண்மை. சில உன்னத லட்சியங்களால் அது உருவாகின்றது. லட்சியங்களை அடைவதற்கு அடிமை அகல்வது மாத்திரம் போதாது. ஒரு சமுதாயம் அடிமையாக இல்லாவிடினும் அதன் கட்டுக்கோப்பு சிதறுண்டு ராஜீயம் ஸ்தம்பித்து நிம்மதியிழந்து அமைதியற்று வர்க்கப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்து குறுகிய மனப்பான்மை, வெறுப்பின் காரணமாக நம்பிக்கை, பரஸ்பர ஒத்துழைப்பின் அஸ்திவாரங்களுக்கு ஆட்டங்கண்டு அதிகாரிகள் லஞ்சப்பேர்வழிகளாகவும், ரத்தவெறியர்களாகவும் மாறி தன்னுடைய திட்டத்தின் ஜீவனாகவும் செய்கையின் அளவு கோலாகவும் இருந்துவந்த நேர்மையை இழந்துவிட்ட பிறகு சுதந்திர சமுதாயம் என்று சொல்லிப் பெருமைப்பட அதற்கு உரிமையில்லை. அ. இ. காங்கிரஸின் மாஜி தலைவர் ஆச்சார்ய கிருபளானி பெங்களூரில் நடந்த மாணவர் காங்கிரஸ் கூட்டத்தில் நியாயமான முறையில் இதை எடுத்துக் காட்டினார். "விடுதலைக்குப்பிறகு நாட்டின் நிர்வாகம் சிரடையும். நம் சர்க்கார் அப்படியிருக்கும்; இப்படி யிருக்குமென்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்த மக்கள் இன்று ஏமாற்ற மடைந்திருக்கின்றனர். இந்திய தலைவர்களின் தலையில் பழைய அரசசேவகர்களின் கொண்டை காட்சி அளிக்கின்றது. மாகாணங்களின் இந்திய கவர்னர்களும், ஆங்கிலேயர்களின் போக்கில் போய்க் கொண்டிருக்கின்றனர். பழைய ராஜபோக சரித்திரத்தை தாங்கி நிற்கின்றனர் அவர்களுடைய ஆடம்பரத்திலும் மாறுதல் ஏற்படவில்லை. இந்திய தேசிய காங்கிரஸ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் லட்சியத்தை அலட்சியம் செய்து விட்டது. ஜனநாயகத்தின் பெயரால் நீக்ரோக்களை அடிமைப்படுத்தி வைக்க முயற்சிக்கும் அமெரிக்காவை பின்பற்றி வருகின்றது. கள்ள மார்க்கெட்டும், லஞ்ச ஊழலும் நாளுக்கு நாள் வளருகின்றன. வகுப்பு வேற்றுமையை ஒழிக்கும் நடவடிக்கைகள் தானாகவே ஓய்ந்துவிட்டன. தேசம் மகாத்மா காந்தியை ஓரேயடி

# மௌலானா யாகூப் ஹஸன் சேட்.

[நாகை V E. M. ஹமீது யூசுபுவத்தனி]

நமது தாய்த் திருநாடாகிய இந்திய நாட்டின் விடுதலைக்கு அரும் பாடுபட்ட பெரியார்களில் மௌலானா யாகூப் ஹஸன் சேட்டும் ஒருவர். அவர் மத்திய மாகாணத்தின் தலைநகரமாகிய நாகபுரியில் 1875-ம் வருஷம் பிறந்தவர். அலிகார் முஸ்லிம் காலேஜில் படித்து பட்டம் பெற்றவர். காலஞ்சென்ற தமது சகோதரர் ஹமீது ஹஸன் சேட்டுடன் 1901ம் வருஷம் முதல் சென்னை நகருக்கு வந்து வசித்து வந்தார். தென்னிந்திய முஸ்லிம் கல்விச்சங்கம், முஸ்லிம்சேவாபடை, போடம் முஸ்லிம் ஹாஸ்டல் முதலியவற்றை ஆரம்பிப்பதிலும், ஸ்காலர் ஷிப்புகளுக்கு நிதி திரட்டுவதிலும் பெரும் பங்கெடுத்துக் கொண்டார். அவர் "கௌமிஹல்சல்" (தேசியக் கிளர்ச்சி) என்ற ஒரு உர்து வாரப்பத்திரிகையையும், "முஸ்லிம் தேசபக்தன்" என்ற ஆங்கில வாரப் பத்திரிகையையும் நடத்தினர்.

## ஐரோப்பிய விஜயம்.

அவர் 1912ம் வருஷம் ஏற்றுமதி இறக்குமதி தொழில் சம்மந்தமாக ஐரோப்பாவுக்கு விஜய்ம்செய்தார். கார்ப்பரேஷனில் மெம்பராக நியமிக்கப்பட்டார் சென்னை சர்வகலாசாலை, துறைமுக டிரஸ்டு போர்டு இரண்டிலும் மெம்பராக இருந்தார். 1914-ல் பம்பாயிலும், 1917-ல் லக்ஷ்மணபுரியிலும் ஹிந்துமுஸ்லிம் ஒப்பந்தங்கள் ஏற்பட்டதற்கு இவரே முக்கிய காரணபூதர். 1919-ம் வருஷம் முஸ்லிம் லீகின் பிரதிநிதியாகவும், தென்னிந்திய வர்த்தக சபையின் பிரதிநிதியாகவும் இங்கிலாந்துக்கு மீண்டும் சென்று, சீர்திருத்தங்கள் பற்றி ஜாயிண்ட் பார்லிமெண்டரிக் கமிட்டிமுன் சாட்சியம் கொடுத்தார்.

## கிலாபத் இயக்கத் தலைவர்

1916-ம் வருஷம் சென்னை லெஜிஸ்லேடிவ் கவுன்ஸிலுக்கு மெம்பராய் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் கிலாபத் இயக்கத்தில் தீவிர பங்கெடுத்துக்கொண்டு துருக்கி சீர்குலைக்கப்படுவதை எதிர்த்து, தென்னிந்தியாவில் கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்தார். அவர் 1919-ல் இங்கிலாந்திலிருக்கையில் ஒரு தூதுகோஷ்டிக்குத் தலைமைவகித்து அப்பொழுதிருந்த இந்தியா மந்திரி மாண்டேகுவை பேட்டிகண்டு, துருக்கியுடன் சமாதான உடன்படிக்கை ஏற்படுவது பற்றி பேசினர் இது விஷயமாக இதர பிரிட்டிஷ் மந்திரிகளையும் சந்தித்தார். அவர் லண்டனில் முஸ்லிம்களுக்கு சமாசார ஆபீஸ் ஒன்றை ஏற்படுத்தி "முஸ்லிம் மனப்பான்மை" என்ற வாரப்பத்திரிகையை நடத்தினர். 1930-ல் இந்தியாவுக்குத் திருப்பி, பிப்ரவரியில் சென்னையில் நடந்த முதல் கிலாபத் மகாநாட்டிற்கு வரவேற்புக் கமிட்டி உபதலைவராக இருந்தார். அந்த மகாநாட்டில் தான் கிலாபத் பிரச்னையில் சர்க்காருடன் ஒத்துழையாமைப்போரை நடத்துவதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது துருக்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட சமாதான உடன்படிக்கையைக் கண்டிப்பதற்காக அவர்தமக்கு லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில், கார்ப்பரேஷன் இன்னும் இதர பொது ஸ்தாபனங்களில் இருந்த மெம்பர் பதவியை ராஜிநாமா செய்தார். ஒத்துழையாமைத் தீர்மானத்தை தேசிய சபையாகிய காங்கிரஸ் மகாசபையில் நிறைவேற்றவும் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார்.

## தேசத்திற்காக சிறைவாசம்.

1921-ல் அவர் கேரள கிலாபத் கமிட்டியின் வேண்டுகோளின் பேரில், அஹிம்ஸா முறையை

---

யாக மறந்தும் விட்டது." வாழ்க்கையின் அமைப்பையே சீர்குலைத்துவிடக்கூடிய சுதந்திரம் எதற்கு உதவும்? சுதந்திரமே நம் லட்சியமென்றால் அது கிடைத்தாய்விட்டது. சோற்றுக்குப்பதில் அதை உண்ணலாம் துணிக்குப் பதிலாக உடுத்தி மானத்தை மூடலாம். விரித்துப் படுக்கலாம். ஆனல் முடியுமா? சுதந்திரம் கிடைத்தவுடன் உண்ண உணவும், உடுக்கத் துணியும் இருக்கஇடமும், சுபிட்சவாழ்வும் கிடைத்துவிட்டதா? எனவே சுதந்திரம் லட்சியமல்ல. லட்சியத்தை அடைவதற்கான மார்க்கந்தான். லட்சியம் இன்னும் எட்ட இருக்கிறது. வழியையே லட்சியம் என்று எண்ணி திருப்தி யடைந்து விடுவதால் லட்சியம் சித்திக்காமலும் போய்விடலாம். சுபிட்சம், சந்தோஷம், சமத்துவம், நியாயம், பொருளாதார புணரமைப்பு, வாழ்க்கைத்தர உயர்வு, ஆத்மீக, தார்மீக முன்னேற்றம், பீதி அவநம்பிக்கையிலிருந்து விடுதலை, தேசத்தில் சிறந்த நிர்வாக அமைப்பு, நம் நாடும் நாட்டு மக்களும் சுதந்திரத்துடன் வாழுகின்றனரென்ற உணர்ச்சி முதலியவைகளே நம் லட்சியம். அதை அடையாதவரை சுதந்திர மடைந்து விட்டோமென்று சொல்லிப் பெருமைப்படுவதும், திருப்தி அடைவதும் முடிவில் வஞ்சிக்கப்பட்டவர்களின் செய்கையாகவே முடியும்.

அனுஷ்டிக்க வேண்டியதன் அவசியத்தை கள்ளிக் கோட்டை முஸ்லிம்களுக்கு எடுத்துரைக்க கோளம் போய்ச்சேர்ந்ததும் அவருக்கு 144 செக்ஷன் சாதாரா செய்யப்பட்டது. அந்த உத்தரவை மீற உறுதிக் கொண்டிருக்கிறுர் என்னும் விஷயத்தை அறிந்த அதிகாரிகள், அவரிடம் நன்னடத்தை ஜாமீன் கேட்டனர். அவர் கொடுக்க மறுக்கவே ஆறுமாத கடுங் காவல் விதிக்கப்பட்டது. அவர் தண்டிக்கப்பட்டதைக்கண்டிப்பதற்காக பனகால் மந்திரிசபை இருந்த அந்த சமயத்தில் லெஜிஸ்லேடிவ் கவுன்ஸிலில் ஒத்தி வைப்புப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது.

கோயம்புத்தூர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும், அவர் கொஞ்ச நாட்களுக்குப்பின் தஞ்சாவூரில் கூடிய தமிழ்நாடு வருஷாந்திர அரசியல் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

## மீண்டும் சிறை வாசம்.

தலைமைப் பிரசங்கத்திலும், இன்னும் இதரப் பிரசங்கங்களிலும் சர்க்காரை அவர் கடுமையாகத் தாக்கியதால் ராஜத்துவேஷக் குற்றத்திற்காக செக்ஷன் 124-A பிரகாரம் கைது செய்யப்பட்டு இரண்டு வருஷ வெருங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். அவர் தமது தண்டனையை கடலூர் சிறையிலும், திருச்சி சிறையிலும் கழித்து தண்டனைக்காலம் பூர்த்தியாக ஆறுமாத காலமிருக்கையில் விடுதலை செய்யப்பட்டார்.

அவர் பழைய லெஜிஸ்லேடிவ கவுன்ஸிலில் மீண்டும் 1930-ம் வருஷத்திலிருந்து மெம்பராய் இருந்தார். அப்பொழுது அவர், முஸ்லிம் கட்சியின் தலைவராகவும் சர்க்காரை எதிர்த்த பெரிய கட்சியாகிய தேசீயக்கட்சியின் உப தலைவராகவுமிருந்தார் மாகாண சுயாட்சியின் கீழ் அவர் சென்னை அசெம்பிளிக்கு சித்தூர் முஸ்லிம் கிராமத்தொகுதியில் காங்கிரஸ் அபேக்ஷகராய் நின்று வெற்றிபெற்றுர். அவர் துருக்கியில் இருக்கும்பொழுது விவாகம் செய்துகொண்டு வந்த கதீஜாபேகம் சென்னை முஸ்லிம் மாதர் தொகுதிக்கு நின்று சென்னை அசெம்பிளிக்கு மெம்பராய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## மந்திரி பதவி.

1937-ம் வருஷம் ஜூலை மாதம் 14-ந்தேதி காங்கிரஸ் மகாசபை சென்னையில் தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஜெயக்கொடி நாட்டி மந்திரி சபையைக் கைப்பற்றியதும் அவர் மராமத்து இலாகா மந்திரியானுர். அவர் மந்திரிபதவியை ஏற்றுக்கொண்டதுமுதல் மக்களுக்குச் செய்த பேருதவிகள் பல. மக்கட்பணியே தெய்வப்பணியென நினைத்து தொண்டாற்றினுர்.

## வகுப்புவாதத்தின் பரம விரோதி

வகுப்பு வாதத்திற்கு எப்பொழுதுமே சாவுமணி அடித்துவந்தார். பாகிஸ்தான் திட்டத்தினுல் தற்பொழுது முஸ்லிம்கள் படும் அவஸ்தையை முன் கூட்டியே மக்களுக்கு எடுத்துச்சொன்னுர். அதனுல் வகுப்புவாதப் புலி ஜின்னு சாகிப் கூட அவரைப் பலவாருக திட்டியதுண்டு. அவரை முஸ்லிம் லீகிலிருந்து தள்ளிவிட்டதாக லீக் கவுன்ஸிலும் முடிவு செய்தது. அவர் இதைப்பற்றி கொஞ்சம் கூட கவலைப்படவில்லை அவர் சென்ற விடமெல்லாம் கருப்புக் கொடி காட்டி எதிர்ப்பு பண்ணிக் கொண்டு இருந்த வகுப்புவாத பிற்போக்காளர்களுக்கு அவர் பிரசங்கங்கள்மூலம் கொடுத்த சாட்டையடிகள் மிகவும் பிரசித்தமானது. அவர் கடைசியில் சென்னையிலுள்ள ரானடே ஹாலில் நடந்த கூட்டத்தில்தான் பேசினுர். அப்பேச்சில் லீகர்களுக்கு சரியான அடியை மண்டையில் கொடுத்தார். லீக் என்றுலே விஷத்தைப் போன்று கருதுவார். அவருடன் லீகிலிருந்து பிரபல தேசீய முஸ்லிமான ஸர் வாஜிர்ஹஸன் மர்ஹூம் என்பவரும் தள்ளப்பட்டார்.

## அரபிய அறிஞர்.

அவர் பாரஸீக அராபிய பாஷைகளில் பெரிய அறிஞர். அவர் எழுதியுள்ள பிரபல கிரந்தமாகிய "கிதாப் அல்ஹூதா" என்ற திருக் குர்ஆனின் தப்ஸீர் மிகவும் விசேஷமானது. அதை எழுதியதற்காக ஐம்பதாயிரம் ரூபாய் சன்மானம் பெற்றுர். இன்னும் 'நாயக வாக்கியங்கள்' என்ற நூலும் 'கோயில்கள், சர்ச்சுகள், பள்ளிவாசல்கள்' என்ற நூலும் எழுதியுள்ளார். கட்டிட கலைகளிலும் அவருக்கு சிரத்தையுண்டு.

## மந்திரி சபை ராஜினுமா,

1939-ல் மகாயுத்தம் ஆரம்பித்ததும் இந்தியர்களைக் கேட்காமல் இந்தியாவையும் யுத்தத்தில் சேர்த்துவிட்டனர் பிரிட்டிஷார் அப்பொழுது மக்களின் பூரண உண்மை பிரதிநிதித்வத்துடன் எட்டு மாகாணங்களில் காங்கிரஸ் அரசாட்சிசெய்துகொண்டிருந்தது. காங்கிரஸ் "எங்களைக் கலக்காமல் ஏன் யுத்தத்தில் சேர்த்தீர்கள்?" என்று பிரிட்டனைக்கேட்டது. அதற்கு அவர்கள் சரியான காரணமும் தக்க பதிலும் சொல்லாமல் "அப்பொழுதே சேர்த்துவிட்டோம்" என்றனர். அதை எதிர்த்து "தாங்கள் யுத்

# அன்ஸாரி, ஆஸாத், உஸ்மான்களின் சமூகம் சந்தேகிக்கப்படுவதா!

மத்திய ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி மெம்பர் ஜனாப் A. M. அல்லா பிச்சை B. A; B L., கீழ்வரும் அறிக்கை விடுத்துள்ளார்:—

நம்முடைய மாகாணம் சந்தோஷகரமான ஒரு மாகாணமாகும். நமக்கு வகுப்பு வெறிகிடையாது. மாகாண முஸ்லிம்களுடன் நான் தொடர்பு கொண்டிருக்கிறேன். தடுமாறிக் கொண்டிருக்கும் ஒரு சிலரைத் தவிர முஸ்லிம்கள் தங்கள் சர்க்காருக்கு பக்கபலமாயிருப்பதை தங்கள் மீதுள்ள புனிதமான கடமையென்று நினைக்கின்றனர். இன்றைய நிலைமையில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை அத்தியாவசியம். உண்மையில் சோதனையும் கஷ்டமும் நிறைந்த இச்சமயத்தில் எல்லாத் துறைகளிலும் நமக்கு ஒற்றுமை தேவை.

நம் மக்களுக்கு போதிய உணவும், உடையும் இல்லை. இருக்க வீடுகளில்லை. அவர்களுக்கு கல்வி போதிக்கப்பட வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாய் உழைத்தாலும் பல வருஷங்கள் உழைப்பதற்கு வேலையிருக்கின்றது.

தன்னுடைய சிறந்த ஆர்வத்தையும், சக்திகளையும் நிர்மாணத் துறைகளில் ஈடுபத்தி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவி செய்யும்படி மனப்பூர்வமாய் நம் பெரியாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஹிந்துஸ்தானியை கற்றுக் கொள்வதால் நம்முடைய கலாச்சாரத்தை நாம் இழந்துவிடப்போவதில்லை. நம்மீது வடநாடு ஆதிக்கம் செலுத்தவும் முடியாது. நாம் மட்டும் ஒழுக்கமுள்ளவர்களாக இருந்தால், இந்தியா பூராவுக்குமே நம்மால் உதவி செய்யமுடியும். நம் சக்திகளை அரசியல் கிளர்ச்சிகளில் விரயம் செய்துவிடக்கூடாது.

நகர முஸ்லிம்களின் துப்பாக்கி, ரிவால்வர் லைசென்ஸ்கள் ரத்து செய்யும்படி தூண்டிய மனப்பான்மை இன்பகரமானதல்ல. டாக்டர் அன்சாரி, மௌலானா முகம்மதலி, மௌலானா அபுல்கலாம் ஆஸாத், மௌலானா மதனி, எல்லைகாந்தி அப்துல் கப்பார்கான், வீரத்தியாகி பிரிகேடியர் உஸ்மான் போன்ற ஏராளமான தேசபக்தர்களை தோற்றுவித்த ஒரு மாபெரும் சமூகம் சந்தேகிக்கப்படுவதற்கு உரித்தானதல்ல முஸ்லிம்கள் நியாயமற்ற முறையில் சந்தேகிக்கப்படுகின்றனர். நம் அரசியல் எதிரிகள் அதை பிரயோஜனப்படுத்திக் கொள்கின்றார்கள்.

இந்திய யூனியனிலுள்ள 450-லட்சப் முஸ்லிம்களின் நம்பிக்கையை காங்கிரஸ் பெற்றாகவேண்டும். முஸ்லிம்களுக்கும் மாகாண காங்கிரஸ் சர்க்கார்களுக்குமிடையே தொடர்பு ஏற்படுத்துவதற்காக முஸ்லிம்கள் அடங்கிய மைனாரிடி போர்டுகள் அமைக்கப்பட வேண்டும். முஸ்லிம்களின் மைனாரிடி போர்டு ஒன்றை உடனடியாக அமைக்கும்படி நம்முடைய மாகாண சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்விஷயத்தை முக்கியமாகக் கருதும்படி அவர்களை வேண்டுகிறேன். இதில் தவறுவது சர்க்காரின் பெரிய அரசியல் தவறாக இருக்கும். காரியங்கள் நழுவிப்போவதை நாம் அனுமதிக்கலாகாது.

---

தத்தில் சேரமுடியாது" என தெரிவிக்கும் பொருட்டு அரசாட்சி செய்துக்கொண்டிருந்த காங்கிரஸ் மந்திரி சபைகளெல்லாம் ராஜினாமா செய்தது. அதன் பிரகாரம் 27—10—39-ல் சென்னை மந்திரிசபையும் ராஜிநாமா செய்தது. அப்பொழுது யாகூப் ஹஸன்சேட்டும் விலகினார்.

## அகால மரணம்.

53-ம் வருஷ ராம்கார் காங்கிரஸுக்குப் போய் கலந்துகொண்டு 23—3—40-ல் திரும்பி சென்னைக்கு வந்தார். அவர் கடைசி நிமிஷம் வரை ஆரோக்கியமாகவே இருந்தார். அன்று மாலை $5\frac{1}{2}$-மணிக்கு தேனீர் அருந்தியபின், தமது மனைவி கதீஜாபேகமுடன் பேசிக்கொண்டிருக்கையில் மார்பில் வலி இருப்பதாகச்சொன்னார். 4, 5 நிமிஷங்களுக்குப் பின் வலி குறைந்தது. மீண்டும் வலி ஏற்பட்டது. உடனே டாக்டர்கள் வந்து இஞ்செக்ஷன் கொடுத்தனர். ஆனால் வலி ஜாஸ்தியாகி அரைமணி நேரத்தில் தமது 65-வது வயதில் நுங்கம்பாக்கத்திலுள்ள அவருடைய பங்களாவாகிய ரட்லண்டு ஹவுஸில் மண்ணுலகை விட்டு விண்ணுலகேகினார்.

ஹிந்து முஸ்லிம் சோதரீர்! இப்பெரியாரின் வரலாற்றைப் பார்த்தீர்களா? அவர் போன்றோர் இவ்விதம் தேசசேவை செய்து நமக்கு வழிகாட்டிச்செல்லாவிட்டால் இன்று சுதந்திரத்துடன் நாம் வாழ முடியுமா? ஆகையால் நாமும் ஜாதி வித்தியாசமெனும் வகுப்புவாதத்தை சுட்டெரித்து அப்பெரியாரின் அடிச்சுவட்டை பின்பற்றி நமது நாடு உலகில் பொலிவுடன் விளங்க ஆவன செய்வோமாக!

# அன்று! ஆனால்... இன்று!! நாளை!!!

—( O. N. மஹமூது. )—

அன்று! ஆனால்........ இன்று!! நாளை!!! இதென்ன வேடிக்கையாக இருக்கிறதென அன்பர்கள் பலர் வியப்படையலாம்! ஆம்! வேடிக்கைதான் வியப்புதான். ஆச்சரியந்தான். உருண்டோடும் உலகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளில் சில; படியுங்கள் உண்மை விளங்கும்.

### அன்று!

1946 ஆகஸ்ட் 16-ல் குறிப்பாக தமிழகத்தில் தலை வணங்கமாட்டோம் என வானைப் பிளக்கும் கோஷம்; தன் மானமுள்ளவர்களென தவிடுபொடியாகும் கூச்சல்; சிறுவர்கள் கரங்களிலேகாட்சியளிக்கிறது அட்டைகள்; அதில் கொட்டை எழுத்துக்களிலே பட்டவர்த்தனமாக பின்வருமாறு தீட்டியிருக்கிறது.

அறிவில் சிறந்தவர்தான்; ஆனால் ஆர்பாட்டக்காரரல்ல இரண்டிலொன்று என்பவர்தான்; ஆனால் ஈரமற்ற நெஞ்சரல்ல. உறுதி உள்ளம் கொண்டவர்தான்; ஆனால் ஊக்கமற்று உழல்பவரல்ல. எதையும் எண்ணிச்செய்பவர்தான். ஆனால் ஏக ரகளை செய்பவரல்ல ஐயமுறுகிறீர்களா யார் என்று? ஒல்லிய உருவத்தினர் ஆனால் ஓலமிடும் நெஞ்சரல்ல. அவ்வப்போதைய நிலையில் மாறாதவர். அவர்தான் காயிதே ஆஜம் முகம்மதலி ஜின்னா. இது அக்காலத்திய அர்த்தமற்ற கோஷம்; அதுமட்டுமா? இந்தியாவின் கமால்! இந்திய முஸ்லிம்களின் ஈடு, இணையற்ற தலைவர்!! இது அக்காலத்திய முஸ்லிம் ஏடுகளிலே—பொது மேடைகளிலே — பொதுவாக முஸ்லிம்களின் மத்தியிலே தவழ்ந்து விளையாடிய ஸ்லோகம். இல்லை...! அர்த்தமற்ற கோஷம்— அறிவுக்கு பொருந்தாத கூச்சல். இதில் நான் மட்டும் விதிவிலக்கா? இல்லை! எனது வாயிலிருந்தும் மேற்கண்ட கோஷங்கள் வன்மையுடன் வெளி வந்தன. ஏன் நீ சிந்திக்கவில்லையென்று நீங்கள் கேட்கலாம் ஆம்! உண்மை. நான் எப்படி சிந்திக்க இயலும்! சிந்தித்து எனது அறிவுக்குப்பொருந்திய முடிவை தெரிவித்தாலும் அல்லது எனது முடிவுப்படி நடந்தாலும் இவன் முஸ்லிமா? அல்லது காபிரா? (முஸ்லிமல்லாதவர்) என்ற வார்த்தை என்னை கதிகலங்கச்செய்யுமே! "ஷரீயத்" திற்கு மாற்றம் செய்பவன் என, என்னை நடுச்சந்தியில் இழுத்துவிடப்படுமே!! 'முனாபிக்' என்ற வார்த்தை என்னை முஸ்லிம்களின் மத்தியில் வாழவிடாமல் செய்யுமே!!! நான் எப்படி மனப் போக்கின்படி மறுமலர்ச்சியடைய முடியும். இப்பொழுது தெரிந்ததா? அக்காலத்திய என்னைப்போலுள்ள முஸ்லிம்களின் உள்ளங்களை.

### ஆனால்?.......இன்று!!

சுதந்திரம் கிடைத்துவிட்டது, சுமுகமாக; எதிர்பார்த்தபடி பாகிஸ்தான் கனவு நடந்த கோரக்கொலைகளால், நிகழ்ந்த படுநாசத்தால், குறிப்பாக பஞ்சாப்பில் நடந்த பயங்கர காட்சிகளால் நினைவாகியது; எதிர்பார்த்தபடி பாகிஸ்தான் கிடைத்ததுதான் தாமதம்! இந்திய முஸ்லிம்களின் உள்ளத்தில் எதிர்பாராத மாறுதல்! எப்பக்கம் சேர்வதென பிரச்னை; இந்திய முஸ்லிம்களிடையே ஓர் பரபரப்பு! ஆம்! உண்மை. அவர்கள் இன்றைய தினமிருக்கும் நிலை இதுதான்........"பாகிஸ்தான், பாகிஸ்தான்" என்று தொண்டைகிழிய கத்தியது பழிப்புக்கு இடமாகிவிட்டது. பாகிஸ்தான் அல்லது கபரஸ்தான் என வானளாவ முழங்கியது; இன்று முச்சந்தி சிரிக்கிறது இல்லை........! முழு உலகமும் நகைக்கிறது. பாகிஸ்தானில் உண்மையில் கபரஸ்தான் ஆட்சியே நடக்கிறது என்பதை இன்று நாம் உணருகிறோம் அக்காலத்தில் "இந்தியாவின் கமால்" என முழங்கியது குறிப்பாக இத்தமிழகத்தில்; ஆனால் .....இன்று! "கபோதி" என நகைக்கிறது இத்தமிழகம். ஏமாற்றிவிட்டு கம்பி நீட்டிவிட்டாரே ஜின்னா சாஹிப் என இன்றைய நிலையில் இந்திய முஸ்லிம்களுக்கு எந்நாளுமில்லாததோர் நினைவு ஏற்பட்டிருக்கிறது. அன்றொரு நாள் "அத்தாயே ஹிந்த்" என்று அர்த்தமற்ற கோஷம் புரிந்தோம். ஆனால் ...................... இன்று "அர்ப்பப்பதர்" என ஆர்ப்பரிக்கின்றோம். அடடா! நாம் ஏன் இவ்வளவு மோசமான நிலையில் இருந்தோம் என்ற நினைவு வருகிறது. ஆம்! பாகிஸ்தானைப் பற்றி கொஞ்சம்கூட அறியாமல் பாகிஸ்தான் கிடைத்தால் அங்கு நமக்கென்ன வேலை? என்பதை முன்கூட்டியே சிந்திக்காமல் பாகிஸ்தான் கிடைத்தால் "ராஜா" மாதிரி இருக்கலாம் என பாமர முஸ்லிம்களின் இதயத்தில் பட்ட அவா! இதில் படித்த முஸ்லிம்களும் பங்கு கொள்ளவில்லையா? எல்லாம் அவர்களால் வந்த வினைதான் இந்த அவல நிலைக்குக் காரணம்! ஆனால்...இந்த அவல நிலை அகல வேண்டும்! சந்தேகம் ஒழிய வேண்டும்!! சலனமற்ற வாழ்க்கையைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும் இப்படிப்பட்ட எண்ணங்கள் முஸ்லிம்களின் உள்ளங்களிலே இப்பொழுது ஊசலாட ஆரம்பித்திருக்கிறது. இதற்கென்ன வழி? என நினைக்க முற்படு

கிறது. ஆம். இது இயற்கையில் வரும் நினைவுதான். இதற்கு வழியிருக்கிறது அது என்ன வழி என்று கேட்கிறீர்களா? அதுதான் காங்கிரஸில் சேருவது; இந்தியப் பிரஜையாக இனிமையுடன் வாழ்வது; அறநெறி நின்று அமைதியுடன் வாழ்வது; உண்மை வழி நின்று உறுதியுடன் வாழ்வது?

### நாளை!!!

இந்தியாவின் உண்மையான பிரஜை! நான்கு கோடி மக்களின் முழு ஆதரவும் இந்தியாவிற்குக் கிடைக்குமென உண்மையான கோஷம் வானைப் பிளக்கவேண்டும்; அதை செய்கையில் தத்ரூபமாக சித்தரித்துக் காண்பிக்கவேண்டும். காங்கிரஸே எனது ஜீவியத்தின் லட்சியம் என ஒவ்வொரு முஸ்லிமும் உணரவேண்டும்; பாகிஸ்தான் கனவு காணக் கூடாது. அதற்கும் நமக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை. அது அன்னிய நாடு ஜின்னா சாஹிப் ஏதாவது உதவி செய்வாரென அறிவற்றவரைப் போல் நம்பவேண்டாம். அறிவின் அடிப்படையிலே முடிவு செய்யவேண்டும். ஆராய்ச்சியின் பாதையிலே முடிவு செய்யவேண்டும் சிந்தனையை திறம்பட செலுத்தி முடிவுக்கு வரவேண்டும். காங்கிரஸ் நம் இருண்ட வாழ்க்கையை இன்பமாக்கச் செய்யும் ஓர் தேசிய ஸ்தாபனமென்று எண்ண வேண்டும் அப்பொழுது தான் நீங்கள் எவ்வித இடுக்கண் இல்லாமல் இந்தியாவில் இன்பமுடன் இதயப்பண்புடன் இறைவனருளால் வாழலாம். அப்படியே அறிவின் பாதையிலே அன்புடனே நடந்து கொள்வார்களாக!

## பாரதி வாசகசாலை ஆண்டுவிழா

கல்லிடைக்குறிச்சி பாரதி வாசகசாலை முதலாவது ஆண்டுவிழா 12—7—48 மாலை தமிழர் கழகத் தலைவர் இழுசைக்கிழார் நாவலர் சா. சோமசுந்திர பாரதி தலைமையில் நடைபெற்றது. ஜனாப் K. M. ஷேக்பீர் முகம்மது கொடி ஏற்றிவைத்தார் மாணவன் K. N. ஷேச்பீர் முகம்மது தேசிய கீதம் பாடினார். வித்வான் ஸ்ரீ குஞ்சிதபாதம் வரவேற்றுப் பேசினார். M. S. வெங்கடாச்சாரி விழாவைத் திறந்து வைத்தார். தலைவர் முன்னுரைக்குப் பிறகு மகாத்மா காந்திஜி, பண்டித நேருஜி, சுப்பிரமணிய பாரதியார், மௌலானா அபுல்கலாம் ஆஸாத் திருஉருவப்படங்களை முறையே K. P. யக்ஞேஸ்வர சர்மா, S. சுப்பிரமணியம், ஸ்ரீ வெங்கடாச்சாரி, ம. கா. க. அங்கத்தினர் ஸ்ரீ சோமசுந்தர தீக்ஷிதர், திறந்து வைத்தனர். "பாரதி விழைந்த பண்பாடு" பற்றி S. சுப்பிரமணியம் சொற்பொழிவாற்றினார். இறுதியில் நெசவாளர் கூட்டுறவு விற்பனை சங்க டைரக்டர் A. முஹம்மது சங்கத்தின் சார்பில் வாசகசாலைக்கு மூன்று புத்தகங்களை பரிசளித்தார். ஸ்ரீ இளங்கோவன் வந்தனோபசாரம் கூற தேசிய கீதத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

E. V. K. மீரான் சாஹிப்.

## முஸ்லிம்களின் நன்மைக்காக ஒரு வேண்டுகோள்.

திருநெல்வேலி ஜில்லா மேலப்பாளையத்திலிருக்கும் ஜனாப் V. S. T முஹம்மது இபுருஹீம் ஒரு தீவிர காங்கிரஸ் வாதி மேலப்பாளையம் முஸ்லிம் லீகர்களால் எவ்வளவோ இடையூறுகளும், கஷ்ட நஷ்டங்களும், அன்னாரின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டும் ஒன்றையும் பொருட்படுத்தாமல் காங்கிரஸிலேயே ஒரு தீவிர வாதியாக இருந்துவருகிறார். திருநெல்வேலி ஜில்லாவில் நடந்த முஸ்லிம் இடைத் தேர்தலில், மிகவும் தைரியமாய் லீக் அபேட்சகருடன் போட்டியிட்டார். இவர் போட்டியிடாவிட்டால் லீக் அபேட்சகருக்கு எதிர்ப்பே இராது. இவர் நாமினேஷன் கொடுத்தவுடன் காங்கிரஸைச்சேர்ந்த ஜனாப் L கிட்டா பாயும் நாமினேஷ்ன் தாக்கல் செய்தார். ஜனாப் கிட்டாபாய் அவர்களை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கனம் K. காமராஜ் அவர்களும், சென்னை மாகாண ஐக்கிய முன்னேற்ற நிர்வாகக் கமிட்டித் தலைவர் ஜனாப் A. M. அல்லாபிச்சை அவர்களும், திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ A. P. E. வீரபாகு அவர்களும் இன்னும் சில முக்கியஸ்தர்களும் வாபஸ் வாங்கும்படிச் சொன்னார்கள். ஜனாப் கிட்டாபாய் வாபஸ் வாங்காததால் ஜனாப் V. S. T. முஹம்மது இப்ராஹீம் காங்கிரஸ் அபேட்சகரை போட்டியிட விரும்பாமல், தேர்தலிலிருந்து விலகிக்கொண்டார். ஜனாப் L. கிட்டாபாய் அவர்களும் தேர்தலில் படுதோல்வியடைந்தார். ஆகவே, இனியாகிலும் உண்மையான தேசிய முஸ்லிம்கள் இறங்கி, வேலை செய்யுமிடத்தில் போலி தேசிய முஸ்லிம்கள் ஆடம்பரமாக கதர் உடுத்திக்கொண்டு அரசியல் விஷயங்களில் தலையிட்டு உண்மையான தேசிய முஸ்லிம்களுக்கும், நம் சமூகத்துக்கும் கேவலத்தை உண்டு பண்ணாமலிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். மேலும் எல்லா முஸ்லிம்களும், முஸ்லிம் லீகைக் கலைத்துவிட்டு சென்னை மாகாண ஐக்கிய முன்னேற்ற நிர்வாகக் கமிட்டியில் மெம்பர்களாகச் சேர்ந்து, இந்திய டொமினியனுக்கு உண்மையாகவும், விசுவாசமாகவும், பக்க பலமாக இருந்து நன்கு நடந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

V. S. S. செய்யது முஹம்மது புகாரி,
செகரட்டரி,
முஸ்லிம் அஸோஸியேஷன், மேலப்பாளையம்.

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது
"ஆஸாத்" விற்பனை செய்ய
ஏஜெண்டுகள் தேவை.

# பாகிஸ்தான் பத்திரிகை உலகம்.

[“ மக்ரிபி பாகிஸ்தான் ” “ ஜமீந்தார் ” பத்திரிகைகள் எழுதியிருக்கும் தலையங்கங்களை கீழே தருகிறோம்.]

## இஸ்லாமிய ஷரீயத்தை விட்டு கலிகுஸ்ஸமான் ஓட்டம்.

“ ஜமீந்தார் ” ஜூலை 4

“ ஷரீயத் என்றால் கலி குஸ்ஸமானுக்கு வெறுப்பு எதைப்பற்றிப் பேசினாலும் அதில் ஷரீயத்துக்கு எதிராக அவர் விஷத்தைக் கக்கியே தீருவார்.” இஸ்லாமிய கலாச்சாரத்தை அனுசரித்து நடக்காதவரை முஸ்லிம்கள் ஷரீயத் ஆட்சியைக் கோரக்கூடாது” என்று சமீபத்தில் அவர் லாகூரில் பேசினார். இந்த லக்னோ வாதத்துக்கு ஏற்கெனவே பதில் கொடுத்தாயிற்று. சவுத்ரி சாஹிப் ஷரீயத்தைக் கண்டு பீதியடைவதாகத் தெரிகிறது. அதைப் பேச்சினாலும் வெளிப்படுத்தி வருகின்றார். கராச்சியில் நேற்று முன் தினம் ஷரீயத்துக்கு எதிராக அவர் பேசியதை ‘ கலி குஸ்ஸமான் ’ என்ற பெயருள்ள ஒரு மனிதனிடம் எதிர்பார்க்க முடியாது. பாகிஸ்தான் முன்னேறவிடாத தொல்லையாகவே ஷரீயத் சட்டத்தை நினைக்கிறாரென்பது அவருடைய பேச்சிலிருந்து வெளியாகிறது. “ இஸ்லாமிய ஆட்சி கோரிக்கையை சரியல்ல என்று சொல்லமுடியாவிட்டாலும் இன்றைய நிலைமையில் அவசரப்பட்ட கோரிக்கையாகும். பாகிஸ்தான் அபாயங்களால் சூழ்ந்திருக்கிறது. முதலில் நாட்டை பலப்படுத்தியாக வேண்டும். . பிறகு ஷரீயத் ஆட்சியைக் கோரலாம். இன்றைய நிலைமையில் இவ்வித கோரிக்கை துன்பங்களை இன்னும் அதிகரித்துவிடும் ” என்றும் அவர் பேசினார் ”

“ இந்த ஒரு அபிப்பிராயம் கடவுள் கிருபையால் தன்னை ஒரு முஸ்லிமென்று சொல்லிக்கொள்ளும் ஒரு மனிதனுடையதாகும். அதுவும் ஒரு சாதாரண முஸ்லிமல்ல அகில பாகிஸ்தானில் மிகப் பெரிய முஸ்லிம் லீக் லீடராகவும் இருக்கிறார். அகில பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கின் கன்வீனர். நாட்டாண்மைக்காரனே வழிப்பறி நடத்தினால் பொதுமக்களின் நிலை என்னவாகும். ”

“ ஷரீயத் சட்டத்தால் இன்றைய தொல்லைகள் அதிகரித்துவிடுமென்ற வாதத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. உண்மையில் எல்லாவித தொல்லைகளுக்கும் ஷரீயத் சட்டமே பரிகாரமாகும் இன்று தேசத்தின் பாதுகாப்புப் பொறுப்பு சம்பளம் பெறும் ஒரு சில ராணுவத்தினருக்கே இருந்து வருகிறது. ஷரீயத் சட்டத்தின் மூலம் தேசத்தின் ஒவ்வொரு தனி நபரும் எதிரிகளுடன் போரிடக்கூடிய சிப்பாயாக இருப்பான். ‘ஜிஹாத் (புனித யுத்தம்)தை ஷரீயத்தே பிரகடனம் செய்யமுடியும். அதுவே இல்லாமலிருக்கையில் ஜிஹாத் பிரகடனம் யார் செய்வது ? மேலும் இஸ்லாமுக்கு மாறான சூழ்நிலை ஏற்படுத்தியிருக்கும் எல்லா சமூகக் குறைகளும் ஷரீயத்தால் தீர முடியும் ஷரீயத்தே எல்லா தொல்லைகளுக்கும் ஆணிவேர் என்று அவருடைய காதில் ஷைத்தான் ஊதியிருக்கையில் சௌத்ரி கலி குஸ்ஸமானுக்கு இதை யார் உணர்த்துவது ? ”

“ உண்மையில் கெட்டுவிட்ட மனப்பான்மை அவரை அறிவிலியும் ஆக்கிவிட்டது. இஸ்லாமிய சட்டம் போதை வஸ்துக்களின் தடையை ஆதரிப்பதாயிருந்தால் நானும் அது அமுலாக்கப்படுவதை விரும்புகிறேன் என்று அவர் பேசியது இதை ஊர்ஜிதம் செய்கின்றது. ஷரீயத் சட்டத்துக்கு எப்பேர்ப்பட்ட நிபந்தனை ?. சாராயத்தைக் குடித்து பிதற்றுவதையும், அபினியைத் தின்று உருளுவதையும், கஞ்சாவை சாப்பிட்டுவிட்டு உறங்குவதையும், கள் குடிப்பதையும் ஷரீயத் ஆதரிப்பதாக சவுத்ரி சாஹிப் எண்ணியிருக்கின்றார் போலும். எனவே போதை வஸ்துக்களின் தடையை ஷரீயத் ஆதரித்தால் நானும் ஆதரிக்கின்றேன் என்று நிபந்தனை போடுகின்றார் ! அல்லாஹ் ! அல்லாஹ் !! ஷரீயத் போதை வஸ்துக்களை தடை செய்கின்றதா ? இல்லையா ? என்றுகூடத் தெரியாத நபர்கள் முஸ்லிம்களின் லீடர்கள் ! எப்பொழுதாகிலும் திருகுர்ஆன் ஓதியிருந்தால் ‘ ஷைத்தானின் செய்கை ’ (அமலிஷ் ஷைத்தான்)யின் அர்த்தம் அவருக்குத் தெரிந்திருக்கும். என்றேனும் ஹதீஸை (நபி அவர்களின் திருவாக்கு) பார்த்திருந்தால் “ போதை வஸ்துக்கள் அனைத்தும் ஹராம் ” (குல்லு முஸ்கிரின் ஹராம்) என்று அறிந்திருப்பார். ஆனால் அவர் போதை சாப்பிடுவது குற்றமல்ல என்று வாதிக்கும் ஹைகோர்ட் தீர்ப்புகளையே படித்திருக்கிறார். இம்மாதிரி பேர்வழிகள் இஷ்லாமிய சட்டத்தை தங்கத் தடிகொண்டு துரத்தாமல் வேறு என்ன செய்வர். இஸ்லாமிய சூழ்நிலையில் போதை வஸ்துக்களுக்கு இடமில்லை யென்பதை சவுத்ரீ சாஹிபுக்கு அறிவுறுத்துகிறோம். அத்துடன் சமூகத்தை துன்பத்தில்

சிக்கலைவைத்து ஓடிவரும் நபர்களுக்கும் படிப்பினைக்குரிய தண்டனை விதிக்கப்படுமென்பதையும் தெரிவிக்கிறோம். ஷரீயத்தில் எவனும் ஓட்டம் பிடிக்க அனுமதிக்கப்படமாட்டான். ஓடுகாலிகளின் முதுகுத் தோல் உறிக்கப்படும். ஓடிவந்துவிட்டதற்காகத் தன் மீதும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று பயந்தே சௌத்ரி சாஹிப் ஷரீயத்தைக் கண்டு பயப்படுகிறார்.

ஷரீயத் சட்டத்தின் பெயரால் ஏற்பட்ட பீதியில் சௌத்ரீ சாஹிப் சட்டத்தையும் மறந்து பேசுகிறார் ' பாகிஸ்தானில் ஷரீயத் ஆட்சியின் அமைப்பு சாத்தியமில்லை. இந்நாடு பிரிட்டிஷ் காமன் வெல்தில் சேர்ந்திருக்கிறது. காய்தே ஆஜம் ஆறுவது ஜார்ஜ் மன்னர்பிரானின் பிரதிநிதி. மன்னர்பிரான் அங்கீகரிக்காதவரை பாகிஸ்தானில் ஷரீயத் ஆட்சி அமுலுக்கு வர முடியாது." என்று கலி குஸ்ஸமான் சொல்லுகிறார்."

''பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதி என்பதில் சந்தேகமில்லை இருப்பினும் அரசியல் சட்டத்தை உருவாக்கும் உரிமையை பாகிஸ்தானிடமிருந்து யாரால் பிடுங்க முடியும் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களுக்கு உகந்ததாகக் கருதும் அரசியலை உருவாக்கி அமுலுக்குக் கொண்டு வரலாமென்று சுதந்திர சாஸனத்தில் தெளிவாகக் கண்டிருக்கிறது. அதற்காகவே பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையும் அமைக்கப்பட்டிருக்கிறது. மன்னர் பிரானுக்கு இந்தியா பாகிஸ்தானில் தலையிட உரிமை இருந்திருந்தால் இந்தியாவில் முஸ்லிம்களின் கொலையும் நடந்திருக்காது சௌத்ரீ சாஹிப் லக்னோவிலிருந்து கராச்சிக்கு ஓடியும் வந்திருக்கமாட்டார்."

" இவ்வித விதண்டா வாதங்களை முஸ்லிம்கள் சகித்துக் கொண்டிருக்க முடியாதென்று சவுத்ரி சாஹிபை எச்சரிக்கின்றோம். மதத்தின் பெயரால் பாகிஸ்தான் அமைந்துள்ளது. உலகம் பூராவிலும் மதத்தின் பெயரால் அமைந்த நாடு பாகிஸ்தான் ஒன்றுதான். இந்நிலையில் இந்நாட்டில் இஸ்லாமிய ஆட்சி ஏன் அமையக்கூடாது? சவுத்ரி சாஹிப் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ள முடியுமேயொழிய சமூகத்தை முட்டாளாக்க முடியாது. உண்மையில் முஸ்லிம் லீகில் இருப்பதற்கும் அவருக்கு யோக்கியதை இல்லை அவர் இருப்பதால் முஸ்லிம் லீகுக்கும் நஷ்டமே. இஸ்லாமிய ஆட்சி அசாத்தியமென்று எண்ணும் கன்வீனரைக்கொண்ட முஸ்லிம் லீகால் முஸ்லிம்களுக்கு என்ன நன்மை ஏற்படும்? ஒற்றுமை, கட்டுப்பாடு என்ற லட்சியத்தை எவ்விதம் சமூகம் அடையும்? தானாகவே ராஜிநாமா செய்வதே சவுத்ரி சாஹிபுக்கு நன்மை. இல்லையேல் முஸ்லிம்கள் அவரை கேவலமான முறையில்.... ...தலைமை ஸ்தானத்திலிருந்து வெளியேற்றிவிடுவர். ஷரீயத் சட்டத்தின் எதிரி முஸ்லிம்களின் தலைவர் ஆகமுடியுமா? இப்பேர்ப்பட்ட பேர்வழியை ஒவ்வொரு இடத்திலும் கருப்புக் கொடிகளால்தான் வரவேற்க வேண்டும். தலைமை தாங்குவது ஒரு புறமிருக்க இஸ்லாமிய சொஸைடியில் இருப்பதற்கும் அவருக்கு யோக்கியதை இல்லை. சவுத்ரி கலிகுஸ்ஸமான் தலைமையிலிருந்து விடுபடும் விதத்தைக்குறித்து இனி முஸ்லிம்கள் சிந்தித்தாகவேண்டும்."

## 'மக்ரிபீ பாகிஸ்தான்' ஜூலை 4

"முஸ்லிம் லீக்கின் புதிய அமைப்பு வேலையுடன் ஷரீயத் ஆட்சியை எதிர்க்கும் வேலையையும் எடுத்துக் கொண்டிருக்கும் சௌத்ரீ கலிகுஸ்ஸமான் முஸ்லிம்களைப் பார்த்து ''ஜாக்கிரதை! ஷரீயத் ஆட்சியின் பெயரையும் உச்சரிக்க வேண்டாம். பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சி அமைக்கும் எண்ணமும் உங்கள் மனதில் உதிக்காமலிருக்கட்டும். இல்லையேல் உங்கள் மீது துன்ப மலைகள் சரிந்துவிழ நேரிடும்." என்று எச்சரிக்கிறார்."

"கராச்சி முஸ்லிம் வாலிபர்களிடையே அவர் சமீபத்தில் பேசிய பேச்சு அவருடைய கடந்த கால இஸ்லாமிய ஆட்சி எதிர்ப்புப் பேச்சு அனைத்தையும் தோற்கடித்துவிட்டது."

"ஷரீயத் ஆட்சி கோரிக்கை தவறானது. அவசரப்பட்டது. பாகிஸ்தானையே அழிக்கும் அபாயங்கள் நிறைந்தது" என்று சொல்லுகிறார்."

"இந்தியாவின் ஒரு பிரதேசத்தில் இஸ்லாமிய ஆட்சியை அமைப்பதில் முஸ்லிம்களுக்கு இருந்து வந்த ஆர்வத்தின் விளைவே பாகிஸ்தான் என்பதில் சந்தேகமில்லை ஆயினும் இப்பொழுது பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சியின் பெயரையும் முஸ்லிம்கள் சொல்லாமலிருக்கவேண்டும் பாகிஸ்தானை ஒரு பலமுள்ள நாடாக்குவதே நம் முதல் வேலையாகும்." என்றும் உபதேசிக்கிறார்."

"கலிகுஸ்ஸமான் என்னதான் சொல்லுகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை. இந்தியாவின் ஒரு பகுதியில் இஸ்லாமிய ஆட்சி ஏற்படுத்துவதே நம் லட்சியமாக இருந்திருக்கும்போது இன்று லட்சியத்தை ஒத்திப்போடும்படி சொல்லப்படுவது எதற்காக? பாகிஸ்தானில் நாம் அமைக்கவிரும்பும் இஸ்லாமிய ஆட்சி பலஹீனமுள்ளதாக இருக்குமென்றும், தான் அமைக்கப்போகும் மதங்கெட்ட ஆட்சி ஆக்ரமிக்கமுடியாததொரு கோட்டையாக விளங்குமென்றும் கலிகுஸ்ஸமான் சொல்லுகிறாரா? பாகிஸ்

தானில் இஸ்லாமிய ஆட்சியோ, பாஸிஸ அடக்கு முறையோ, ஜனநாயக அரசாங்கமோ அமைப்பது நம்முடைய சொந்த வேலையாசம். மக்களுக்கு அந்த உரிமையுண்டு இஸ்லாமிய ஆட்சியைப் பற்றி பேச வேண்டாமென்றும் அதனால் பாகிஸ்தான் பலஹீனமடைந்துவிடுமென்றும் சவுத்ரி சாஹிப் எதற்காக சொல்லவேண்டும்? இஸ்லாமிய ஆட்சி அமைக்கும் வேலையை ஒத்திப்போட பாகிஸ்தானை எதிர்நோக்கியிருக்கும் முக்கியமான நெருக்கடியான பிரச்னைகளை காரணமாகக் காட்டுவது முட்டாள்தனமாகும். இன்றைய மதங்கெட்ட பாகிஸ்தான் சர்க்காரைவிட சிறந்த முறையில் இஸ்லாமிய ஆட்சி பிரச்னைகளை சமாளிக்கமுடியும் என்று கலிகுஸ்ஸமானுக்குத் தெரியாதா! அப்படியிருக்க இஸ்லாமிய ஆட்சி கோரிக்கையிலிருந்து ஒதுங்கியிருக்கும்படி எதற்காக வற்புறுத்தப்படுகிறது. நம் தலைவர்கள் இஸ்லாமிய ஆட்சியைக் கண்டு பீதியடைந்து மதங்கெட்டத் தனத்தை வளர்ப்பதிலும் ஏன் முனைந்திருக்கின்றனர்?

‘எதுவரை இதர முஸ்லிம் நாடுகள் திருகுர்ஆன் சட்டத்தை அமுலாக்குவதில்லையோ அதுவரை பாகிஸ்தானிலும் இஸ்லாமிய ஆட்சி அமைய முடியாது” என்று சவுத்ரி சாஹிப் சொல்லியிருக்கிறார். இவ்வாதம் இஸ்லாமையும் திருகுர்ஆனையும்விட்டு ஓடுவதற்கான சால்ஜாப்பேயாகும். இதர முஸ்லிம் நாடுகள் திருகுர்ஆனை அனுசரித்து தங்கள் கொள்கையை வகுக்காமலிருப்பதால் பாகிஸ்தான் அவைகளை காப்பியடிக்கவேண்டுமென்பது அவசியமில்லை.”

“இஸ்லாமிய ஆட்சி கோருபவர்கள் இஸ்லாமிய ஆட்சியைப்பற்றி தங்கள் தாத்பர்யம் இன்னதென்று தெளிவாக்கவில்லை” என்று சௌத்ரி சாஹிப் சொல்லுகிறார். லட்சியத்தைவிட்டு ஓடுவதற்கு இதுவும் ஒரு சாக்காகும். ஏனெனில் இஸ்லாமிய ஆட்சியின் அமைப்பை நிர்ணயிப்பது தனி நபர்களின் வேலையல்ல. முஸ்லிம்கள் அனைவர்களின்மீதுமுள்ள கடமையாகும். அவ்வித ஆட்சி திருகுர்ஆனின் சட்டங்கள் நபி அவர்களின் திருவாக்குகள் கலீபாக்களின் அனுஷ்டானத்தின் உதவியைக்கொண்டு பரஸ்பர ஒத்துழைப்பின் மூலமே அமைய முடியும். இந்த வேலை அரசியல் நிர்ணய சபையைச் சேர்ந்ததாகும். இஸ்லாமியக் கொள்கை அடிப்படையில் அரசியல் திட்டம் உருவாக்க இன்றைய அரசியல் நிர்ணய சபை மெம்பர்களுக்கு யோக்கியதை இல்லாவிட்டால் யோக்கியதாம்சமுள்ளவர்களின் உதவியைப் பெறமுடியும்.”

“இஸ்லாமிய ஆட்சியின் உண்மையான உருவம் இதுவரை மக்கள் முன் சமர்ப்பிக்கப்படவில்லை. யென்று ஷரீயத் ஆதரவாளர்கள்மீது கலிகுஸ்ஸமான் குற்றஞ் சாட்டுகிறார். ஆனால் மதங்கெட்ட ஆட்சியை உருவாக்கும் பேர்வழிகள்மீதும் இதே குற்றத்தை சாட்டமுடியும் என்பதை அவர் மறந்துவிட்டார். எம்மாதிரி ஆட்சிமுறை அமைக்க விரும்புகிறதென்று சௌத்ரி கலிகுஸ்ஸமான் பலப்படுத்திவரும் முஸ்லிம் லீக் கூட பொதுமக்கள்முன் இதுவரை சமர்ப்பிக்கவில்லை. இந்தியாவைப்போல் மத அடிப்படையற்ற ஆட்சியே லட்சியமென்றால் பாகிஸ்தான் என்று கோஷித்திருக்கவேண்டிய அவசியமில்லை. ஒரு சில லீடர்கள் அதிகார பீடங்களில் அமர்ந்து பொது மக்களை ஆட்டு மந்தையைப் போல் நடத்துவதற்குத்தான் இந்த நாடகம் பூராவும் நடிக்கப்பட்டதா?

இஸ்லாமிய ஆட்சியின் பெயரால்
ஏமாற்றப்பட்ட இந்திய முஸல்மான்கள்
இனியாகிலும் உணர்வார்களா!

## அதிகாரிகளுடைய மனைவிகளும் அதிகாரிகள்.

ஒருவித யோக்கியதாம்சமும் இல்லாதவர்கள் பெரியபெரிய பதவிகளை வகிப்பது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். அதிலும் கணவன் பதவிக்கு வந்த உடனே மனைவி பொதுமக்களின் தலைவியாகிவிடுவது அதைவிட ஆச்சரியமல்லவா! கணவன் ஒரு பள்ளிக்கூடத் திறப்புவிழாவில் பிரசங்கம் புரிந்துகொண்டிருக்கும் அதே சமயம் மனைவி ஒரு நர்சிங் ஹோம் திறப்பு விழாவில் பேசிக் கொண்டிருப்பாள். கணவன் ஒருகூட்டத்தில் நபி நாயகத்தைப் பற்றி வர்ணித்துக்கொண்டிருப்பான்; மனைவி மற்றொரு கூட்டத்தில் ஹஜ்ரத் பாத்திமாவைப்பற்றி பேசிக் கொண்டிருப்பாள். அவனுக்கு நாயகத்தைப் பற்றியோ, அவளுக்கு ஹஜ்ரத் பாத்திமாவைப் பற்றியோ ஒன்றுமே தெரியாததுதான் அதிலுள்ள அதிசயம். ஆயினும் அவன் பாமர மக்களுடைய காயிதே ஆஜமாகவும், அவள் அதற்குகுறையாத அந்தஸ்துடையவளாகவும் ஆகிவிடுகிறார்கள். இம்மாதிரி தலைவனையும் தலைவியையும் கொண்ட ஒரு சமூகத்தின் கதிஎன்னவாக இருக்கும் என்பது சிந்திக்கவேண்டிய விஷயம். வீட்டைக்கூட சாமாளிக்கத் திறமையற்ற ஒரு பெண் கணவன் பதவிக்கு வந்ததும் பொது மக்களின் தலைவியாக மாறிவிடுகிறாள்!

—‘ஸபீனா,’ லாஹூர்.

## தாடிக்காரர்கள் திண்டாட்டம்.

கபூர்தலா ஜாமியா மசூதி இமாம் மௌலானு ஷாஹ் முஹம்மத் ஜாபநத்வி ஒருநாள் லாகூரில் நடந்து போய்க்கொண்டிருந்தார். அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே முஸ்லிம் என்று யாரும் சொல்லி விடலாம் ஜீப் கார் ஒன்று அவர் பக்கத்தில் வந்து நின்றது. அதிலிருந்தவாலிபன் ஒருவன் மௌலானுவை கார் அருகில் வரும்படி கூப்பிட்டான். அருகில் வந்ததும் இருவருக்கும் கீழ்கண்ட சம்பாஷணை நடந்தது.

வாலிபன்:— நீர் யார்?

மௌலானு:— நீர் யார்?

வாலிபன்:— நான் கபூர்தலாவிலிருந்து வந்துசேர்ந்த ஒரு அகதி, நீர்யார்?

மௌலானு:— நான் கபூர்தலாவில் உங்களுடைய இமாமாக இருந்தவன் (மசூதியில் தொழுகை நடத்திவைப்பவன்.)

வாலிபன்:— நம்ப முடியவில்லை. உண்மையில் நீர் முஸ்லிம்தானு?

மௌலானு:— உண்மையில் நான் உங்களுடைய இமாம்தான்.

வாலிபன்:— அப்படியானுல் குரானிலிருந்து சில பகுதிகளை ஓதிக்காட்டுங்கள் பார்க்கலாம்?

மௌலானு:— குரான் பூராவும் ஓதட்டுமா?

வாலிபன்:— வேண்டாம். ஸூரத் யாஸீன் மட்டும் ஓதுங்கள் போதும்.

மௌலானு:— ஹிஜாஸி, மிஸ்ரி, கூபி இவைகளில் எந்த கிராஅத் ஓத வேண்டும்.

வாலிபன்:— மன்னிக்கவும் உங்களுடைய தாடியையும், தலைப்பாகையையும் பார்த்து உங்களை ஒரு சீக்கியன் என்று சந்தேகித்தேன் சீக்கியர்களை வேட்டையாடவே நான் அலைந்து கொண்டிருக்கிறேன்.

மௌலானு:— (கோபத்துடன்) இஸ்லாமுக்கு அபகீர்த்தியை உண்டாக்கும் கொடியவனே! முதலில் என்னைச்சுடு. உங்களைப்போன்ற பாவிகளுடன் வசிப்பதைவிட சாவதே மேல்.

ஒன்றுமே பேசாமல் காரில் ஏறிக்கொண்டு போய்விட்டான். அவ்வளவுலேசாக அவனிடமிருந்து மௌலானு தப்பியது அதிசயந்தான்! இதற்கு முன் அவனிடம் சிக்கிய அநேக தாடிக்கார மௌல்விகள் பட்டபாடு கொஞ்சமல்ல. குரான் ஓதிக்காட்டுவார்கள். கலிமா சொல்லுவார்கள். இஸ்லாமைப் பற்றி பிரசங்கமே செய்வார்கள். அப்பொழுதுகூட அவன் நம்பமாட்டான். கடைசியில் துணியை விலக்கிப் பார்த்த பிறகுதான் அவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டு அவர்களைப் போக அனுமதிப்பான் துணியை விலக்கிக்காட்டாமல் தப்பியது மௌலானுவின் அதிஷ்டந்தான். ஒரு சமயம் ஷேக் பூரா ஸ்டேஷனில் இரண்டு தாடிக்காரர்கள் சந்தேகத்தின்பேரில் சூழ்ந்து கொள்ளப்பட்டனர். இன்னெரு தாடிக்காரரை ஜக்ஹூமிலிருந்து குஜராத்வரை கொண்டுபோனுர்கள் எவ்வளவோ சொல்லியும், குரான் ஓதிக்காட்டியும் பலன் கிடைக்கவில்லை. ஒற்றர்கள் கூட குரான் ஓத கற்றுக் கொண்டு வருகிருர்கள் என்று அவருக்கு பதில் கிடைத்தது.

('கௌஸர்' லாஹூர்)

## பாகிஸ்தானில் வெள்ளை யானைகள்

மேற்கு பஞ்சாபில் முஸ்லிம் அகதிகளுக்கு சேவைசெய்ய 1500 ரூபாய் சம்பளத்தில் வெள்ளையர்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். இந்த வெள்ளை ஊழியர்களுக்கு ஆடம்பரமான பங்களா, தனி கார் வசதிகளும் உண்டு. அகதிகள் வேலைக்கு பாகிஸ்தானிலிருக்கும் முஸ்லிம்கள் தகுதியற்றவர்களா? என்று பாகிஸ்தான் சர்க்காரைக் கேட்கிறோம். குறைந்த செலவில் முஸ்லிம்கள் வெள்ளையர்களைவிட சிறந்த முறையில் சேவைசெய்ய முடியும் அகதிகளுடைய மதம், பாஷை, கலாச்சாரம், நாகரீகத்தில் ஒன்றுபட்டவர்கள் இருக்கும்பொழுது முற்றிலும் மாறுபட்டவர்களை அமர்த்தியிருப்பதின் கருத்து என்ன? அவர்களிடம் உண்மையான சேவையைத்தான் எதிர்பார்க்க முடியுமா? அவர்களுக்கு கொடுக்கப்படும் கொழுத்த சம்பளங்களை அலவன்ஸ் என்று சொல்லுவதுதான் அதிலுள்ளவிசித்திரம். நம்முடைய ஒருசிறிய தேவையையும் பூர்த்தி செய்வதற்கு பொருளாதார நெருக்கடியை அடிக்கடி எடுத்துக் காட்டிவரும் பாகிஸ்தான் சர்க்கார் இங்கு வெள்ளை யானைகளைக் கட்டி கொழுக்கவைக்கும் காரணம் என்ன?

('இன்கிலாப்' லாஹூர்)

## பாகிஸ்தானில் அகதிப்பெண்கள் அவதி

கராச்சி ஹாஜி காம்ப் அகதி முகாமில் சில முஸ்லிம் அகதிப் பெண்கள் பலவந்தமாக மணம் செய்து கொள்ளப்பட்டார்கள். அகதிகளுடைய பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளும் ஒரு தலைவன் பணத்தை வாங்கிக்கொண்டு இந்த கொடுமையைச் செய்துவருகிறுன். சமீபத்தில் தாய் தகப்பனிழந்த

ஜலந்தரைச்சேர்ந்த ஒரு பெண்ணை பலவந்தமாக மணம் செய்விக்க முயற்சி நடந்தது. அவள் மறுத்துக் கொண்டிருந்தபோதே கலியாணச் சடங்குகள் நடந்து கொண்டிருந்தன. அங்கிருந்து தப்பி ஓட முயற்சிக்கையில் பிடிக்கப்பட்டாள். செம்மையாய் அடித்து நிர்ப்பந்தமாக கல்யாணம் செய்துவைக்கப்பட்டது. இவ்வித சம்பவங்களை போலீஸார் விஜாரணை செய்யவேண்டும் இந்த கொடூரங்களைச் செய்பவர்கள் எவ்வளவு பெரிய தலைவர்களாக இருப்பினும் பாகிஸ்தான் சர்க்காரில் பெரிய பதவிகளை வகிப்பினும் அவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும். இம்மாதிரி அகதிப் பெண்களைக் காப்பாற்ற கடுமையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்படி பீர் இலாஹி பக்ஷ் அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

—('அஞ்சாம்', கராச்சி)

## பாகிஸ்தான் விரோதி இப்பி பக்கிரி

பிஷாவரில் இப்பி பக்கிரி காஷ்மீர் படையெடுப்பை எதிர்த்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். பட்டாணிஸ்தான் ஆதரவாளர்களின் கும்பல் நாளுக்கு நாள் வலுத்துவருகிறது. பன்னுவில் பட்டாணிஸ்தான் பிரசாரம் செய்துகொண்டிருந்த ரயில்வே குமாஸ்தா ஒருவன் பிடிபட்டான். பன்னு சுங்கச் சாவடியில் இருக்கும் போலீஸ்காரன் ஆயுதங்களுடன் ஓடி கொள்ளைக் கூட்டத்தினருடன் சேர்ந்து கொண்டுவிட்டான். இப்பி பக்கிரி வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் பாகிஸ்தான் வெள்ளையர் அரசாங்கமென்றும், காஷ்மீர் படையெடுப்பு இஸ்லாமுக்கு விரோதமானதென்றும், தன்னுடைய ஆட்களுக்கும், பாகிஸ்தான் ராணுவத்துக்கும் நடந்த கைகலப்பில் தன்னுடைய வீரர்களில் 50 பேர் உயிர் துறந்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. இப்பி பக்கிரி பாகிஸ்தானின் ஜன்ம விரோதி. அவனுடைய வலையில் சிக்க வேண்டாமென்று பொது ஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

—('டான்', கராச்சி.

## கல்லிடைக்குறிச்சி

11—7—48 காலை இவ்வூர் நகர காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள் தேர்தல் அ. இ. கா. க. அங்கத்தினர் ஸ்ரீ N. சோமயாஜுலு முன்னிலையில் நடந்தது. கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் மாகாண ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி அங்கத்தினரும் நெல்லை ஜில்லா செயல் கமிட்டி அங்கத்தினருமான ஜனாப் K. M. ஷேக்பீர் முகம்மது, உபதலைவர் ஸ்ரீ குளத்துவய்யர் காரியதரிசி S. சுப்பிரமணியம், உதவி காரியதரிசி A. பிச்சையா முதலியார், பொக்கிஷதார் V. சிவனு முதலியார்.

E. V K. மீரான் சாஹிப்.

# மிஸ்டர் ஜின்னாவுக்கு கல்யாணம்?

## பலூஜ் சிறுமி நீலோபருக்கு ஜின்னா காதல் கடிதம்!

லாஹூர் 16 ஜுலை.

குவெட்டாவைச்சேர்ந்த 15 வயதுள்ள நீலோபர்கானம் என்ற பலூஜ் சிறுமிக்கு பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் காதல் கடிதம் ஒன்று பிடிக்கப்பட்டிருப்பதாக லாஹூரிலிருந்து வெளிவரும் 'ஜம் ஜம்' என்ற பாகிஸ்தான் பத்திரிகை தன்னுடைய 10-ந்தேதி வெளியீட்டில் எழுதுகின்றது.

சமீபத்தில் மிஸ்டர் ஜின்னாவின் குவெட்டா விஜயத்தின் போது அரசியல் இலாகாவில் பெரிய உத்தியோகத்திலிருக்கும் ஸர்தார் குல்பாஸ்கான் அலிஜய் உடைய இரண்டாவது மகளாகிய நீலோபர்கானம் என்னும் 15-வயது சிறுமி ஆடோகிராப் வாங்க மிஸ்டர் ஜின்னாவிடம் வந்தாள். அவளுடைய அழகும் குணமும் மிஸ்டர்ஜின்னாவை ஆகர்ஷிக்காமல் போகவில்லை. அதன் பிறகு மிஸ்டர் ஜின்னா குவெட்டாவில் தங்கியிருந்த காலம் பூராவும் நீலோபர்கானம் தினந்தவராமல் அவரிடம் வந்து போய்க்கொண்டிருந்தாள் என்று சொல்லப்படுகிறது.

நீலோபர்கானம் எழுதியுள்ள ஒரு கடிதத்தின் பதிலே மிஸ்டர் ஜின்னாவின் கடிதம். நீலோபர்கானம் தன்னுடைய கடிதத்தில் என்ன எழுதியிருந்தாள் என்பது தெரியவில்லை. ஆயினும் மிஸ்டர் ஜின்னா எழுதியிருக்கும் பதிலில் தான் நீலோபரை "சட்டபூர்வமாக" மணந்துகொள்ள தயாராக இல்லையென்றும் ஆனால் தன்னுடைய நட்பு உறவை (Friendly Relation) நீடிக்க விரும்புவதாகவும் எழுதியுள்ளார். இவ்விஷயத்தில் மேற்கொண்டு ருசிகரமான பல விஷயங்கள் வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


### வரவேற்கிறோம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக, சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்.

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.

# வளரும் ஜனநாயகம் - 2.

—:( ‘தராசு’ )—

ஜனநாயக லட்சியம் சரியான முறையில் உருவாக நீண்ட தாமதமேற்படுகிறது. சீக்கிரத்தில் உருவாக்கிக்கொண்ட சில தேசங்களுமிருக்கலாம். ஜனநாயகம் வள்ரும் ஜனநாயகம் என்ற பெயரை அடையும் போதே அதன் வளர்ச்சிக்கு மக்கள் இன்னும் பாடுபடவேண்டும் என்று தெரிகிறது. ஜனநாயகம் வளருவதற்குப் பல இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் ஏற்படவும் கூடும். நாட்டை ஆள்வது அரசர்களின் தெய்வீக உரிமை என்பதை மறுத்து ஜனநாயக உரிமையை நிலை நாட்டுவதில் மனித சமூகம் சரியான முறையில் வேலை செய்யாததே பல இடையூறுகளுக்குக் காரணமாக அமைந்துவிட்டது. எப்படி இருந்தபோதிலும் வளரும் ஜனநாயக சரித்திரத்தில் ஜனநாயகப் போராட்டம் பெரும் வியப்பைத் தரும் ஒரு சம்பவமாக அமைந்திருக்கிறது.

மனித வர்க்கம் தனது உரிமைகளையும் கடமைகளையும் உணர்ந்து இன்பமாக வாழ ஜனநாயகத்தில்தான் இடமிருக்கிறது என்பதை இன்னும் சரியாக உணரவில்லை. சமீப காலத்தில் அவ்வித இன்பகரமான வாழ்வை எதிர்பார்க்க முடியாதபடி பல்வேறு பிரச்னைகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்கின்றன. அரசின் அதிகாரத்தை ஒரு சிலரிடம் ஒப்படைத்துவிட்டு, மனித வர்க்கத்துக்கு கீழ்படியும் சுபாவத்தை அளவுக்கு மீறி கைக்கொள்ளுவதே வளரும் ஜனநாயகத்துக்கு தடையாக இருக்கின்றது ஜனநாயக ஏற்பாட்டில் பலவிதமான முறைகள் இருக்கின்றன. ஜனநாயக லட்சியத்திற்குகந்தபடி அனுபவ சாத்தியமான பல்வேறு தேவைகளை அனுசரித்து ஜனநாயகத்தை ஓரளவு உருவாக்கி முதன்மையாக வெற்றி பெற்ற தேசங்கள் இங்கிலாந்தும், அமெரிக்காவும்தான் ருஷ்யா தேசத்தின் ஆட்சி முறையில் சமீப காலத்திற்குள் சோஷலிஸ ஜனநாயகம் ஏற்பட்டிருப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். ஆனால் அதை ஜனநாயக முறையில் ஒப்புக்கொள்ள அறிஞர்கள் சம்மதப்படவில்லை.

ஜனநாயக லட்சியத்தைப் போற்றும் தேசங்களில். ஜனநாயகத்தைப் பற்றிய சந்தேகமும் கூடவே இருந்துவருகிறது. அரசியல் திட்டங்களை தயாரிப்போரிடமும், பெரிய தலைவர்களிடமும் இந்த சந்தேகத்தைக் வெகுவாக காணமுடிகிறது. அதிகாரத்தை கட்டுப்படுத்தும் தடைகளும், விதிகளுமிருப்பதே இந்த சந்தேகத்திற்குக் காரணமாகிறது. இச்சந்தேகத்தின் சக்தி ஜனநாயகத்தின் சக்தியைக் குறைத்துவிடுகிறது. பிரதிநிதித்வ முறையும் சில சமயங்களில் விசித்திரமான அவநம்பிக்கையைக் கொடுக்கிறது. பார்லிமெண்டரி முறையைக் கைக்கொண்டு நடைபெறும் அரசில் புதிய மாறுதல் ஏதாவது தோன்றிவிடக்கூடுமோ என்ற பயத்தினால் பலவிதமான தந்திரங்களை அனுசரிக்கிறார்கள். அதில் ஒன்றுதான் மேல்சபை முறையாகும். நடைமுறையில் ஜனநாயகம் இல்லாமலும், அதில் உற்சாகமற்ற முறையிலும் அரசு நடக்கும் தேசங்களில்தான் ஜனநாயகம் மறைந்து சர்வாதிகாரம் தோன்றச் செய்கிறது. மக்களிடம் அரசாங்கத்துக்கு நம்பிக்கை இல்லாததும் அரசாங்கத்திடம் மக்களுக்கு நம்பிக்கையில்லாததுமே ஜனநாயக வீழ்க்துக் காரணமாகும். இதனால்தான் பொறுப்பாட்சி முறையை அறிஞர்கள் ஜனநாயக சித்தாந்தத்தில் சேர்த்துவிட்டார்கள்

சில தேசங்களில் மக்களுடைய பிரதிநிதித்வ முறை சரியாக இல்லாததால் தோன்றிய கட்சியரசில் ஊழல்கள் அதிகமாகி இறுதியில் மக்கள் ஏமாற்றப்பட்டுவிடுகிறார்கள். அதனால் அரசாங்கமாவது அன்னிய ஆபத்தைபோ, அல்லது உள்நாட்டில் ஏற்படும் பெரியதொரு நெருக்கடியையோ, சமாளிக்கமுடியாதபடி ஏற்படும் நிலைமையும் ஜனநாயகம் முறிவதற்குக் காரணமாகும் முதன் முதலில் ஏற்படும் பிரதிநிதித்வ அரசு குறைபாடுகளை அதிகமாகக் கொண்டதாகவும், காலத்துக்குத் தக்கபடி மாறிவரும் பொருளாதார தேவைகளுக்கும், தொழில், வர்த்தகம் முதலியவைகளுக்கேற்றவாறு நடக்க முடியாததாகவுமிருந்து அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் மனப்பான்மையில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டாலொழிய சர்வாதிகாரம் தோன்ற முடியாது. உலகத்தில் வளரும் ஜனநாயகத்தின் நிலை இன்று எப்படியிருக்கிறதென்று பார்க்கும்போது இரண்டு உலக மஹா யுத்தங்களின் விளைவாக மக்களின் மனதில் நீண்டகால திட்டங்களுக்கு இடமில்லாமல் தொடர்ந்து வரும் பொருளாதாரக் கஷ்டமும் வகுப்புக் கலகங்களும், அரசியல் குழப்பங்களும் மக்களின் வருங்கால நம்பிக்கையைக் குறைத்தும் வருகையில் சில தலைவர்கள் ஜனநாயக போர்வைக்குள் புகுந்துகொண்டு ஜனநாயக வளர்ச்சியைத் தடை செய்துகொண்டும் வருகிறார்கள் என்று தெரிகிறது.

தேசீயம், ஜாதீயம் இந்த இரண்டின் இன்றியமையாத கோரிக்கைகளை சில ஜனநாயக அரசுகள் அங்கீ





தஞ்சை ஜில்லா விற்பனை உரிமையாளர்:—

— K. கணேசன், தென்பாதி (சீர்காழி) —

பல சிறந்த

அலாரம் டைம்பீஸ்கள்



4½" டயல்
கைபிடியுடன்
அழகிய
கலர் கேஸ்
மிகவும்
உறுதியாக
தயாரிக்கப்
பட்டவை.
ரூபா 30/-

ஜலால் & ஸன்ஸ்,
ராட்டன் பஜார், சென்னை.

கிளை ஸ்தாபனங்கள்

மவுண்டு ரோடு, சென்னை

அபிட் ரோடு, ஐதராபாத் டெக்கான்.


கரிக்க மறுத்தும் ஜனநாயக வளர்ச்சிக்குத் தடையாக முடிந்தது. ஜனநாயக பந்தங்களைவிட ஜாதீய, தேசீய பந்தங்கள், மனப்பான்மைகள் முதலியவைகள் மனித சமூக வளர்ச்சியின் முதலிடம் பெறுகின்றன. ஜனநாயகமில்லாமல் வாழ முடியும் ஆனால் திட நம்பிக்கையுள்ளவர்களும் சமதர்ம வாதிகளும் விஞ்ஞானிகளும், யாராக இருந்தபோதிலும் மனித சாஸ்திர ஆராய்ச்சியில் எவ்வளவுதான் ஜாதீயத்தைப் புறக்கணித்தாலும், ஜாதீய நம்பிக்கையில்லாமல் உயிர் வாழ முடிவதில்லை. ஜாதீய நம்பிக்கைகளில் (கொடுமையில்லாதவைகளின்) அடிப்படையானவைகளை ஒப்புக்கொண்டு, தேசீய மனப்பான்மையை வளர்த்து ஜனநாயகத்தை வளரும்படி செய்வது சரியான முறையாகும்.

நாட்டின் விடுதலைக்காக தியாகம் செய்தவர்கள் என்ற பரந்த மனப்பான்மையில் கௌரவித்து அவர்களிடம் அரசாங்கத்தையும் ஒப்படைக்கும்போது இவர்களுடைய போக்கு சில சமயங்களில் சர்வாதிகாரமாகத் தோன்ற முடியும். விபரீதமான அரசியல் முறைகளை அன்னியர் அமுல் செய்யும்போது ஏற்படும் ஈவிரக்கமற்ற சுரண்டலும், ஆக்ரமிப்பு நிறைந்தவையாக இருப்பதுடன் சமாதானம், சுதந்திரம், கலாசாரம் நாகரீகம் முதலியவற்றிற்கேற்படும் ஆபத்தைவிட தியாகத்தின் பெயரால் ஜனநாயக முறையில் நடக்கும் அரசில் ஆபத்து குறைவாகத்தான் இருக்கும். ஜனநாயகத்தை விரும்பாதவர்கள் செய்யும் பிரசாரங்கள் தற்காலீகமாக சில இடங்களில் பலித்தாலும், ஏராளமானவர்கள் இதை ஒப்புக்கொள்வதுபோல் பிரசாரம் செய்தாலும் நாகரீக மனிதன் ஜனநாயக லட்சியத்தில் நம்பிக்கையை இழந்து விட்டதாகவோ, அல்லது யதேச்சாதிகாரத்தையோ, அல்லது அடிமை வாழ்விலோ விபரீதமான அன்பு பிறந்துவிட்டதாகவோ நினைக்க இடமில்லை. இம்மாதிரியான பிரசாரங்கள் நமது ஜனநாயகத்திலும் புகப்பார்க்கிறது. இதைத் தடுத்து ஜனநாயகத்தை வளரும்படிச் செய்ய வேண்டியது நமது கடமையாகும்.

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.